சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.02.06.2026.
OS.No. 161/2018
PW2 : தங்கபாண்டியன் (வயது 38 ) த/பெ. ராஜேந்திரன்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**1 முதல் 4, 6,7 பிரதிவாதிகள் தரப்பு கு.வி தொடர்ச்சி**

எனது பெரியம்மா பெயர் லட்சுமி அம்மாள். லட்சுமி அம்மாள் இறந்த பின்பு தான் எனது தாயார் கமலாவை எனது தகப்பனார் திருமணம் செய்து கொண்டார். எனது தாயார் 1999 ல் இறந்தார். எனது பெரியம்மா எந்த வருடம் இறந்தார் என்றால் தெரியாது. எனது தாயார் இறக்கும் வரை எங்கள் குடும்பம் கூட்டு குடும்பமாக இருந்தது என்றால் சரிதான். லட்சுமி அம்மாள் என்ன நோய்வாய்ப்பட்டு இறந்தார் என்றால் தெரியாது.

எனது பெரியம்மா நோயினால் தான் இறந்தாரா அல்லது வேறு காரணத்தினால் இறந்தாரா என்றால் நோயினால் இறந்தார் ஆனால் என்ன நோய் என்று எனக்கு தெரியாது. எனது அம்மா சிறுநீரக செயலிழப்பினால் இறந்தார். எனது பெரியம்மாவிற்கு கூட்டு குடும்ப வருமானத்தில் தான் வைத்தியம் பார்த்தார்களா என்றால் இல்லை, எனது தகப்பனார் தான் வைத்தியம் பார்த்தார். அந்த காலகட்டத்தில் எனக்கு சுமார் 15 வயது இருக்கும்.

அந்த காலகட்டத்தில் எனது தகப்பனாரும் கூட்டு குடும்பத்தில் இருந்து வந்தார் என்றால் எனது தாயார் இறப்பதற்கு 10 வருடங்களுக்கு முன்பே எனது தகப்பனார் கூட்டு குடும்பத்திலிருந்து வெளியேறிவிட்டார். எனது தாயாருக்கும், பெரியம்மாவிற்கும் சீர்வரிசை செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எந்த சீர்வரிசையும் செய்யவில்லை என்று எனக்கு தெரியும். செய்கிறேன் என்று சொன்னார்கள் ஆனால் செய்யவில்லை.

அந்த காலத்திலேயே எனது அம்மாவிற்கும் பெரியம்மாவிற்கும் எல்லா சீர்வரிசைகளையும் செய்து கொடுத்து சொத்துக்களை பிரித்து கொடுத்துவிட்டார்கள் என்றும், அதனால் தான் எனது தந்தையான 1 ஆம் பிரதிவாதி அவரது குறுக்கு

விசாரணையில் மேற்படி விவரத்தை ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல, ஒப்புக்கொள்ளவில்லை. ஏற்கனவே எனது தாயாருக்கும், பெரியம்மாவிற்கும் சொத்துக்களை பிரித்து கொடுத்துவிட்டதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

திருமணமேட்டில் உள்ள தாவா சொத்துக்களில் வயல்காட்டினை கரைமேடு என்று சொல்வார்களா என்றால் அது பற்றி தெரியாது. வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**5 ஆம் பிரதிவாதி தரப்பு கு.வி** - மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ signed/
தங்க பாண்டியன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி